கனம் இராமநாதபுரம் மாவட்ட முதன்மை / அமர்வு நீதிபதி அவர்கள் முன்பாக

FIRST INFORMATION REPORT
முதல் தகவல் அறிக்கை
(Under Section 173 BNSS)

TAMIL NADU POLICE
INTEGRATED INVESTIGATION FORM-I

C 8319419

1. District : இராமநாதபுரம் மாவட்டம் PS: தாலுகா காவல்நிலையம் Year: 2025 ஆண்டு FIR No.: 26/25 முத.அ. எண் Date: 15.12.2025 நாள்

2. (i) Act சட்டம்: தமிழ்நாடு திருத்தச்சட்டம் 2018 Sections பிரிவுகள்: 7(b) of PC Amendment Act 2018

(ii) Act சட்டம்: Sections பிரிவுகள்:

(iii) Act சட்டம்: Sections பிரிவுகள்:

(iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : குற்ற நிகழ்வு நாள் Date from : நாள் முதல் 15.12.2025 Date to : நாள் வரை

Time Period : நேர அளவு Time from : நேரம் முதல் காலை 10.50 Time to : நேரம் வரை

(b) Information Received at PS. Date : காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் 15.12.2025 Time : நேரம் 12.00 மணி

(c) General Diary Reference : Entry No(s) பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் எனாதி-III Time : நேரம்

4. Type of Information : Written/ Oral / Electronic form : தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக / மின்னணு வடிவம் எழுத்து மூலமாக

5. Place of Occurrence (a) Direction and Distance from PS: குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும் சுமார் 4.5 கி.மீ தென்மேற்கில் வேளாண்மை உதவி இயக்குநர் அலுவலகம் முதுகுளத்தூர், இராமநாதபுரம் மாவட்டம்

Beat Number : முறைக் காவல் எண்

(b) Address : முகவரி

(c) In case outside limit of this Police Station, then the Name of P.S : இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் District : மாவட்டம்

6. Complainant /Informant (a) Name : குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் K. தீத்தாராமன்

(b) Father's/ Husband's Name : தந்தை / கணவர் பெயர் V.K. கருப்பையா

(c) Date / Year of Birth : நாள் / பிறந்த ஆண்டு 42/2025

(d) Nationality : நாட்டினம் இந்தியன்

(e) Passport No. : வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்

Date of Issue : வழங்கப்பட்ட நாள்

Place of Issue : வழங்கப்பட்ட இடம்

(f) Occupation : தொழில் உரக்கடை உரிமம்

(g) Address : முகவரி எம். வாகைக்குளம், முதுகுளத்தூர் இராமநாதபுரம் மாவட்டம்

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
தெரிந்த / ஐயப்பாட்டிற்குரிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள்
(தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)

சேகவராமன், வேளாண்மை உதவி இயக்குநர், முதுகுளத்தூர்
இராமநாதபுரம் மாவட்டம்

8. Reasons for delay in reporting by the complainant / Informant:
குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்

- தாமதம் ஏது மில்லை -

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

—

10 Total value of properties stolen / involved :
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு —

11 Inquest Report / Un-natural death Case No. If any:
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால் —

12 FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

சமர்ப்பிக்கிறேன் : M.குமரேசன், காவல் ஆய்வாளர், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புப்பிரிவு, இராமநாதபுரம் மாவட்டம் ஆகிய நான் இன்று 15.12.2025 ஆம் தேதி 12.00 மணிக்கு அலுவலக பணியில் இருக்கும் போது வாதி K.சீத்தாராமன் ஆஜராகி கொடுத்த புகாரைப் பெற்று புகார்தாரர் மற்றும் இராமநாதபுரம் மாவட்டம், முதுகுளத்தூர் வேளாண்மை உதவி இயக்குநராக பணிபுரியும் திரு.கேசவராமன் ஆகியோரது முன் நடத்தை குறித்து இரகசிய விசாரணை மேற்கொண்டும் புகார் குறித்த விபரங்களை ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை தென் சரக காவல் கண்காணிப்பாளரிடம் தகவல் தெரிவித்து அனுமதி பெற்றும், இராமநாதபுரம் ஊதக பிரிவு குற்ற எண்.26/2025 u/s 7 (b) of Prevention of Corruption Act, 1988 as amended in 2018ன் படி இன்று 15.12.2025 ஆம் தேதி காலை 12.30 மணிக்கு வழக்கு பதிவு செய்தேன். புகாரின் விபரம் பின்வருமாறு:

13 Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed ..... Rank ....., to take up the Investigation / Refused Investigation / transferred to PS.....on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் ..... பதவி ..... நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு ..... காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

K.Seetharaman 15.12.2025

15/12/2025

14 Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் / பெருவிரல் இரேகைப் பதிவு

Signature of the Officer in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

15. Date & Time of despatch to the court:
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்

15.12.2025 - 12.40 மணி

Name: பெயர் M.குமரேசன்
Rank: நிலை .....No. எண் .....
காவல் ஆய்வாளர்,
ஊ.த.க, பரிவு,

இராமநாதபுரம் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு குற்ற எண் 26/2025 u/s 7 (b) of Prevention of Corruption Act, 1988 as amended in 2018 வழக்கின் தொடர்ச்சி

அனுப்புநர் K. சீத்தாராமன், வயது 42/2025. த/பெ V.K. கருப்பையா. எம்.வாகைக்குளம், முதுகுளத்தூர், இராமநாதபுரம் மாவட்டம் பெறுநர் காவல் ஆய்வாளர், அவர்கள்,ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு, இராமநாதபுரம் மாவட்டம். அய்யா, நான் மேலே கண்ட முகவரியில் குடியிருந்து வருகிறேன். மேலும் நான் முதுகுளத்தூர் பஞ்சாயத்து யூனியன் ஆபிஸ் தெருவில் VK கருப்பையா அன் கோ என்ற பூச்சிக் கொள்ளி மருந்து சில்லறை விற்பனை நிலையம் நடத்தி வருகிறேன். நான் கடந்த 04-06-2025 ஆம் தேதி முதுகுளத்தூர் வேளாண்மை உதவி இயக்குநரிடம் பூச்சிக் கொல்லி மருந்து சில்லறை விற்பனை நிலையம் நடத்துவதற்கான லைசென்ஸ் வேண்டி விண்ணப்பம் செய்தேன். மூன்று மாதம் கழித்து கடந்த 03.11.2025 ஆம் தேதி எனக்கு லைசென்ஸ் கிடைக்கப்பெற்றது. அதனைத்தொடர்ந்து கடந்த 14.11.2025 ஆம் தேதி முதுகுளத்தூர் வேளாண்மை உதவி இயக்குநர் திரு.கேசவராமன் என்பவர் எனது கடைக்கு வந்து என்னிடம், நான் தான் உனக்கு லைசென்ஸ் கொடுத்த அதிகாரி, புதுசா கடை ஓபன் செய்கிற கடைக்காரர்கள் எல்லாரும் லைசென்ஸ் வாங்கிட்டா ரூ.15 ஆயிரம் கொடுத்து கவனிப்பாங்க. நீ ஒன்னும் கண்டுக்கிற மாட்டிகிறியப்பா, நாளைப்பிண்ண நாங்க வேண்டாமா எனச் சொன்னார் அதற்கு நான் என்ன சார் செய்யணும் எனகேட்டதற்கு, ஆபிசுக்கு நிறையா செலவு இருக்குல, நீ கொடுத்தா தான நீயும் நல்லபடியா பிசின்ஸ் நடத்த முடியும் என கூறிச்சென்றார். அதன்பிறகு இரண்டு தடவை என்னை தேடி எனது கடைக்கு வந்து விசாரித்து சென்றுள்ளார். அப்போது நான் கடையில இல்லை. கடந்த 12.12.2025 ஆம் தேதி மாலை 04.57 மணிக்கு எனது செல்போன் நம்பர் 7558103754 க்கு 9443642248 என்ற நம்பரில் இருந்து முதுகுளத்தூர் வேளாண்மை உதவி இயக்குநர் திரு.கேசவராமன் பேசி, என்னப்பா நான் கேட்ட ரூ.15,000/- என்னாச்சு எனக்கேட்டார் அதற்கு நான் அவ்ளோ பணம் என்னால கொடுக்க முடியாது சார் எனக்கூறியதற்கு சரி ரூ.5,000/-த்தை குறைச்சுட்டு ரூ.10,000/- கொடுங்க எனச்சொன்னார். பின்னர் கடந்த 13.12.2025 ஆம் மாலை 04.00 மணியளவில் எனக்கு

மிஸ்டு கால் கொடுத்தார். நான் போன் செய்து அவரிடம் பேசிய போது பணம் என்னப்பா ஆச்சு எனக் கேட்டார் அதற்கு நான் வியாபாரம் சரியில்ல சார் கொஞ்சம் கஷ்டமா இருக்கு எனச்சொன்னதற்கு நல்லபடியா பிசினஸ் பண்ணணுமா வேண்டாமா எல்லா கடைக்காரர்களிடமும் கேட்டு பாரு ரூ.15,000/- குறைச்சு நான் வாங்குறதில்லை உனக்காக ரூ.5,000/- குறைச்சுருக்கேன் எனச்சொல்லி போனை கட் பண்ணி விட்டார். இன்று 15.12.2025 ஆம் தேதி காலை 10.50 மணிக்கு மீண்டும் எனக்கு மிஸ்டு கால் கொடுத்தார். நான் போன் செய்து அவரிடம் பேசிய போது பணம் என்னப்பா ஆச்சு எனக் கேட்டார் அதற்கு நான் இப்போதைக்கு முடியாது சார் என சொன்னதற்கு ரூ.2,000/-த்தை குறைச்சுட்டு ரூ.8000/-மாவது கொடுப்பா எனக்கேட்டார். இன்னைக்கு (15.12.2025) சாயங்காலம் 3 மணிபோல எனக்கு போன் பண்ணிட்டு ஆபிசுக்கு வாங்க எனச் சொன்னார். அதன்பின்பு நான் யோசித்து பார்த்து பூச்சிக் கொல்லி மருந்து சில்லறை விற்பனை நிலையம் நடத்துவதற்கான லைசென்ஸ் கொடுத்ததற்கு பரிசாக லஞ்சப்பணம் கேட்ட முதுகுளத்தூர் வேளாண்மை உதவி இயக்குநர் திரு.கேசவராமன் என்பவர் மீது புகார் செய்ய முடிவு செய்தேன். ஆகவே, என்னிடம் லஞ்சப்பணம் ரூ. 8,000/- கேட்ட முதுகுளத்தூர் வேளாண்மை உதவி இயக்குநர் திரு. கேசவராமன் என்பவர் மீது தக்க நடவடிக்கை எடுக்குமாறு மிகத் தாழ்மையுடன் கேட்டுக் கொள்கிறேன். இப்படிக்கு (ஒப்பம்) K.சீத்தாராமன். அய்யா, வாதி நிலையம் ஆஜராகி இன்று 15.12.2025 ஆம் தேதி 12.00 மணிக்கு கொடுத்த புகாரைப்பெற்று வாதி மற்றும் எதிரியின் முன்நடத்தையை விசாரணை செய்து 12.30 மணிக்கு இராமநாதபுரம் ஊதக பிரிவு குற்ற எண்.26/2025 u/s 7 (b) ஊழல் தடுப்பு திருத்தச்சட்டம் 2018 ன் படி வழக்கு பதிவு செய்தேன். இதன் அசலையும், வாதியின் புகாரையும் இணைத்து கனம் மாவட்ட முதன்மை மற்றும் அமர்வு நீதிமன்றம், இராமநாதபுரம் அவர்களுக்கும், இதர நகல்களை சம்மந்தப்பட்ட உயர் அதிகாரிகளுக்கும் அனுப்பி வைத்தேன்.

15/12/2025

காவல் ஆய்வாளர்
ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புப் பிரிவு
இராமநாதபுரம்.